வைத்திருக்கிறேன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் பயின்ற யானையடி பள்ளி அமைந்துள்ள கும்பகோணத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரால் இன்டர்நெட் வசதி உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட புதிய Digital library-மின்னணு நூலகம் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இதனைக் கேட்கிற நான் அன்பழகன், கொடுக்கிறவர் மாண்புமிகு வீரமணி அவர்கள்; வரலாற்றில் பெயர் உள்ளவர்கள்; தயவுசெய்து ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து, எதிர்வருகின்ற காலங்களிலே, கொள்கை முடிவினைத் தளர்த்துவதற்கு வழிவகைகள் இருக்கும்பட்சத்தில், தேவையான வழிவகைகளை உருவாக்கி, உறுப்பினருடைய கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

மாணவியர் விடுதி

***56447—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 ஜனவரி 22]

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு 14 விதமான விலையில்லா பொருட்களைத் தந்து, விலையில்லா மிதிவண்டி தந்து மற்றும் விலையில்லா மடிக் கணினியும் தந்து, கல்வி உதவித்தொகையும் தந்து, பல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், பல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திக் கொடுத்து, கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களில் வசிக்கும் சாதாரண அடித்தட்டு மக்களின் பிள்ளைகளும் மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் நிலையை உருவாக்கித் தந்த எங்கள் தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் லிங்காயத் எனும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவியர் சுமார் 700 பேர் உயர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பகுதியில் 3 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவர்கள், அடர்ந்த காட்டுப் பாதை வழியாகத்தான்

பள்ளிக்கு வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. இப்பகுதியில் எந்தவொரு பிற்படுத்தப்பட்டோர் விடுதியும் இல்லை. இப்பகுதி மக்கள் பாதுகாப்பு கருதி தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவிகளின் நீண்ட நாள் கோரிக்கையான பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, இனி வருங்காலங்களில் புதிய விடுதிகள் துவங்குவதற்கான வரன்முறைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி துவங்குவது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்று கூறியதற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*